2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 386, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

386—

மீன் பதப்படுத்தும் நிலையம்

***15260—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தென்னாம்பட்டினம், கீழமூவர்கரைப் பகுதிகளில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம், கீழமூவர்கரைப் பகுதிகளில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகையே, தமிழகத்தின் மணி விளக்கே, பொங்கும் பூங்குழலே, போற்றும் தமிழ் உலகே, எங்கும் உங்களது புகழ், ஏடெல்லாம் பாராட்டு, மீன்பிடித் தடைக்கால உதவித் தொகையை மீனவ மகளிருக்கு உயர்த்தி வழங்கிய கருணைக் கடலே, உங்களுக்கு என்றும் கிழக்கு, இனி இல்லை மேற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கும் வரும் ஒருநாள் அம்மா நீங்கள் இருக்கும் திசை நோக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தெய்வீகத் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாம்பட்டினம் பகுதி, கீழமூவர்கரை, மேலமூவர்கரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவக் கிராமங்களான நாட்டூர்குப்பம், மடத்துக்குப்பம் மற்றும் சாவடிக்குப்பம் ஆகிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலே பிரதானத் தொழிலாக இருந்து வருகிறது. மழைக் காலங்களில் அதிக மீன்கள் விற்பனையாவதில்லை. அதனைக் கருவாடாகவும் உலர்த்த முடிவதில்லை. எனவே, அங்குள்ள மீனவ மக்களின் நலன் கருதி, மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பது மிக அவசியமாக இருப்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, அங்கு மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன எனத் தமிழக மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம், கீழமூவர்கரை, மேலமூவர்கரை மற்றும் கீழக்கரை ஆகிய கிராமங்களில் சுமார் 49 சிறிய வகைக் கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் 3 விசைப் படகுகள்மூலம், மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். 3 விசைப் படகுகள்மூலம், ஜெகதாப்பட்டினம் மற்றும் காரைக்காலில் தங்கி மீன் பிடித்து வருகின்றனர். சிறிய வகைக் கண்ணாடி நாரிழைப் படகுகள்மூலம், மத்தி, ஊளி, பாரை, சூரை, அசரை, கவளை மற்றும் வஞ்சிரம் போன்ற மீன்களை நாளொன்றுக்கு சுமார், 1,700 கிலோ அளவில் பிடித்து தங்களுடைய வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றார்கள். இவ்வாறு கிடைக்கும் மீன்கள் உள்ளூர் மற்றும் அருகில் இருக்கக்கூடிய பகுதிகளில் முழுமையாக விற்று வருகின்றனர். இந்த மீன்கள் உள்ளூர் விற்பனைக்கே பற்றாக்குறையாக உள்ள நிலையில், புதிய மீன் பதப்படுத்தும்

2014 ஆகஸ்ட் 8]

நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாம்பட்டினம் ஊராட்சி, பெருந்தோட்டம் ஊராட்சி ஆகிய இரண்டு ஊராட்சிகளிலுள்ள மீனவ மக்களின் கோரிக்கையான மீன் உலர் களம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

387—

சாலை அமைத்தல்

***35985**—**திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரவக்கல் கிராமத்திலிருந்து பேர்ணாம்பட்டு நகரம் வரை வனப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.